ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2085/45 - 2018 අගෝස්තු මස 24 වැනි සිකුරාදා - 2018.08.24
*2085/45 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/78* (xvi)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2018, ஓகத்து 23.*

**கட்டளைச்சட்டம்**

1. இக்கட்டளைச்சட்டமானது 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பட்டப்பின் முகாமைத்துவ நிறுவகக் கட்டளைச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 23 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் ஆக்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் “சட்டம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1985 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் தேதிய 381/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 1985 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் தேதியிடப்பட்ட கட்டளைமூலம் 1986, சனவரி 1 ஆந் தேதியன்று தாபிக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் “நிறுவகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பட்டப்பின் முகாமை நிறுவகத்திற்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இந்நிறுவகம் இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும். (இதனகத்துப்பின்னர் “பல்கலைக்கழகம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்).

1A - PG 4184 - 107 (2018/08)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. இச்சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கு (இதனகத்துப்பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றிற்கும் அமைய, நிறுவகமானது பின்வருவனவற்றைச் செய்வதற்கு தத்துவங்கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) மாணவர்களை அனுமதித்தல்;

(ஆ) நிறுவகத்தின் விதப்புரையின்மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், நிதி மற்றும் நிருவாகம் பற்றிய பல்வேறு கற்கைத்துறைகளில் இலங்கையினதும் இலங்கைக்கு வெளியேயும் பட்டப்பின் அறிவுறுத்தல்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்தரங்குகள், பயிற்சிகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை ஏற்பாடு செய்தல்;

(இ) முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், நிதி மற்றும் நிருவாக கற்கைகளின் பல்வேறு துறைகளில் வழங்கப்படவேண்டிய பட்டப்பின் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் விசேட திறமைகள் ஆகியவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் தீர்மானித்தல்;

(ஈ) பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்தோடு முகாமை மற்றும் நிருவாகத்தின் பல்வேறு கற்கைத் துறைகளில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் பட்டப்பின் பரீட்சைகளை நடாத்துதலும் அத்தகைய தேர்வுகளில் சித்தியடைந்திருப்பதோடு நிறுவகத்தின் கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகம் துணைவிதிகளினால் விதித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிபந்தனைகளையும் திருப்தி செய்துள்ள ஆட்களை பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் பட்டங்கள், பட்டப்பின் திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விசார் திறமைகள் ஆகியவற்றை வழங்குவதற்கு தகுதியுடையனரென விதித்துரைத்தல்; அத்துடன் அந்நோக்கத்திற்கென பல்கலைக்கழக ஆதரவின்கீழ் பட்டமளிப்பு விழாக்களை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும்;

(உ) இந்நிறுவகத்தில் அனுமதி கோரும் ஆட்கள் அல்லது இந்நிறுவகத்தின் மாணவர்கள் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்டத்திலான கற்கை இடங்களிலும் சித்தியடைந்த தேர்வுகளையும் பயின்ற கல்விக் காலங்களையும் அல்லது கற்கைக் காலங்களையும் மூதவையால் அங்கீகரிக்கப்படும் நோக்கங்களுக்காக விதந்துரைத்தலும், அவ்வங்கீகாரத்தை எந்நேரத்திலும் கைமீட்டலுக்கு விதந்துரைத்தலும் மேற்படி தேர்வுகளும் கல்வி அல்லது கற்கைக் காலங்களும் துணைவிதிகளால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிறுவகத் தேர்வுகளுக்கும் அல்லது அவற்றின் பாகத்துக்கும் அத்தகைய கல்வி அல்லது கற்கைக் காலத்துக்கும் அல்லது அவற்றின் பாகத்துக்கும் சமமானவையாய் இருத்தல் வேண்டும்;

(ஊ) பல்கலைக்கழகத்துக்கும் நிறுவகத்துக்கும் வெளியேயுள்ள இடங்களில் ஆராய்ச்சிகளையும் பயிற்சிநெறிகளையும் அல்லது பயிற்சிநெறிகளின் பாகங்களையும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யும் ஏதேனும் துணைவிதிக்கு இணங்க அவற்றை அவ்வாறு நடத்துவதற்கு ஒழுங்குகள் செய்தல்;

(எ) முகாமைத்துவம் மற்றும் நிருவாகக் கற்கைகளில் கற்கைநெறிகளையும் பயிற்சியையும் ஆராய்ச்சியையும், வெளியீட்டையும், நடாத்துவதற்காக அல்லது நிறுவகத்தின் எவையேனும் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காக நிறுவகத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை அல்லது பொருளளவில் ஒத்த குறிக்கோள்களைக் கொண்டவையான, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களோடு அல்லது நிறுவனங்களோடு ஆள்வலுவையும் பொருள்களையும் ஏனைய வகையான மூலவளங்களையும் பரிமாற்றுதல் மூலமாகவோ பங்கிடுதல் மூலமாகவோ பெறுதல் மூலமாகவோ கூட்டாக உழைத்தல்;

(ஏ) நிறுவகத்தின் போதனை, பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்துக்காக, இலங்கையிலோ வெளிநாட்டிலோ ஒன்றில் பகிரங்க அல்லது தனியார்துறை நிறுவனங்களுடன் அல்லது ஒழுங்கமைப்புக்களுடன் வசதி வாய்ப்புக்களையும் மூலவளங்களையும் ஏற்பாடு செய்வதன் மூலம் அல்லது வேறுவகையாக ஒத்துழைத்தல்;

(ஐ) நிறுவகத்தின் நோக்கங்களுக்காக நூலகங்கள், ஆய்வுகூடங்கள், தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் (IT) ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் வாசிப்பு அறைகள், பொழுது போக்கு நிலையங்கள், பணியாட்டொகுதி மற்றும் மாணவர்கள் போதனை அறைகள் மற்றும் வேறு நலன்புரி வசதிகள் மற்றும் வேறு கட்டிடங்கள் ஆகியவற்றை நிறுவுதலும், அவற்றை சாதனமயப்படுத்தலும் அவற்றைப் பேணுதலும்;

(ஒ) வெளிநாட்டு கல்வியாளர்கள் மற்றும் உயர்தொழிலர்கள் உட்பட பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆட்களை நிறுவகத்தின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும், கலந்தாலோசனையாளர்களாகவும், ஆராய்ச்சி மேற்பார்வையாளர்களாகவும் நியமதித்தல் அத்துடன் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் அத்தகைய ஆட்களின் சேவையின் நியதிகளையும் நிபந்தனைகளையும் மற்றும் அவர்களுடைய சம்பளங்கள், படிகள், வேதனங்கள் அல்லது வேறு நன்மைகளையும் தீர்மானித்தல்;

(ஓ) அறிவார்ந்த சஞ்சிகைகள், புத்தகங்கள் பருவகால இதழ்கள் மற்றும் கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் விழுமியம் மற்றும் அக்கறையுள்ள வேறு வெளியீடுகள் என்பவற்றை அச்சடித்தலும் வெளியிடுதலும் அத்துடன் அதற்கு பங்களிப்பு செய்வதற்கு எழுத்தாளர்களை ஈடுபடுத்தலும் மேம்படுத்தலும் அனுசரணையளித்தலும்;

(ஔ) கல்விசார் மற்றும் உயர்தொழில் முன்னேற்றம் மற்றும் விழுமியத்தின் நோக்கத்திற்காக மற்றும் நிறுவன நன்மைக்காகவும் கருத்தரங்குகள் மாநாடுகள், வதிவிட செயலமர்வு என்பவற்றை ஒழுங்கமைத்தலும் நடாத்துதலும்;

(க) கல்விசார் நிருவாக மற்றும் வேறு ஆட்களுக்குமான நிறுவக பணியாட்தொகுதியின் தொழில் விருத்திக்கு ஏற்பாடு செய்தலும் அத்துடன் பணியாட்டொகுதி நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள், கூட்டு சமூக பொறுப்புடைமை (CSR) நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபடுதலும் அதற்கு அனுசரணை அளித்தலும் அத்துடன் நிறுவகத்தின் பழையமாணவர் சங்கத்தினதும் பரஸ்பர நன்மைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பழையமாணவர் சங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பினதும் செயற்பாடுகளுடன் கூட்டாக உழைத்தலும் அதற்கு அனுசரனை அளித்தலும் அத்துடன் மேம்படுத்தலும்;

(ங) நிறுவகத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக கட்டணங்களை விதித்தலும் பணங்களையும் உபகரணத்தையும் ஏற்றுச் செலவழித்தலும்;

(ச) நிறுவகத்தின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய மற்றெல்லாச் செயல்களையும் காரியங்களையும், அவை மேற்கூறிய தத்துவங்களின் இடைநேர்விளைவானவையாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி செய்தல்;

5. நிறுவகத்தின் அதிகார சபைகள் பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) முகாமைச் சபை;

(ஆ) கற்கைச் சபை அல்லது சபைகள்; அத்துடன்

(இ) அத்தகைய அதிகார சபைகளாக இருப்பதற்கென கட்டளைச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

6. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையானது நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக்குழு ஆதல் வேண்டும் என்பதுடன் அது பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்:

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள்; அதாவது -

(அ) நிறுவகத்தின் பணிப்பாளர் அதாவது (இதனகத்துப்பின்னர் "பணிப்பாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்);

(ஆ) பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் பீடாதிபதி; அத்துடன்

(இ) பல்கலைக்கழக பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி.

(2) கல்விசார், உயர்தொழில்சார், கைத்தொழில்சார், கமத்தொழில்சார், விஞ்ஞான ரீதியிலான, முகாமைத்துவம்சார், நிதிசார், தொழிநுட்பம்சார், சட்ட மற்றும் நிருவாகத்துறைகளில் திறமையான சேவைகளை வழங்கிக் கொண்டிருக்கும் ஆட்களிடையேயிருந்து (இதனகத்துப்பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் எட்டு உறுப்பினர்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(i) உயர்கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(ii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(iii) (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பல்கலைக்கழக பேரவையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்; அத்துடன்

(iv) ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப்பினர்கள்.

7. (1) சபையின் தவிசாளர் பணிப்பாளராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சபையின் எல்லாக் கூட்டங்களிலும் தலைமை தாங்குதலும் வேண்டும். தவிசாளர் சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தலைமைதாங்க இயலாது போயின், சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்கவென தம்முள்ளிருந்து எவரேனும் உறுப்பினரைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலொழிய, அவர் அத்தகைய நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படும் மூன்றாண்டுக் காலத்துக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் தமது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர், அவர் முன்னமே தமது பதவியை வறிதாக்கினாலொழிய, அவருக்கு முன் இருந்தவரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவி வதித்தல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் ஆணைக்குழுவின் தவிசாளருக்கு முகவரியிட்டுத் தமது கைப்படக் கடிதம் எழுதுவதோடு அதன் பிரதியை பணிப்பாளருக்கும் அனுப்பிவைப்பதன் மூலமும் தமது பதவியைத் துறக்கலாம்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், வராமைக்கான லீவு இன்றி சபையின் அடுத்துறும் மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறின், சபையின் உறுப்பினர் என்ற பதவியை அவர் வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படல் வேண்டும். அதனால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆணைக்குழு 6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைக் கவனத்திற்கொண்டு பொருத்தமான ஆள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(5) சபையின் ஏதேனும் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(6) சபை அவசியமாகும் போதிலெல்லாம் கூடுதல் வேண்டும். எவ்வாறாயினும், ஒவ்வோர் ஆண்டிலும் நான்கு தடவைகளுக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

(7) பணிப்பாளர் அவ்வாறு செய்வது அவசியமெனக் கருதும் போதெல்லாம் அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொரு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களிடமிருந்து எழுத்திலான வேண்டுதல் கிடைக்கப்பெறுவதன்மேல் பதினான்கு நாட்களுக்குள்ளாக, சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

8. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது இக்கட்டளைச் சட்டத்தால் நிறுவகத்திற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் என்பதோடு கடமைகளையும் பணிகளையும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாகவும் பல்கலைக்கழக மூதவையினது தத்துவங்களுக்கும் பணிகளுக்கும் அமைவாகவும், கற்கைச்சபையின் மதியுரைக்கும் முடிபுக்கும் அமைவாகவும், சபையானது நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி, வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகள் என்பவற்றின்மீது பொதுவான கட்டுப்பாட்டையும் அவற்றின் பொது நெறிப்படுத்துகையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம், (2) ஆம் உட்பந்திகளினால் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்:

(அ) நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும், கட்டுப்படுத்துதலும், நிருவகித்தலும்;

(ஆ) கட்டளைச் சட்டத்தினதும் வேறு ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும் தீர்மானித்தலும்;

(இ) குறித்த நோக்கங்களுக்காக நிறுவகத்தின் கையாள்கையில் வைக்கப்பட்ட ஏதேனும் நிதிகளை நிருவகித்தல்;

(ஈ) கல்வி/பயிற்சி/ஆராய்ச்சி/மேற்பார்வைப் பணியாட்டொகுதியினரை இடைவருகை/ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளுதல்;

(உ) நிறுவகத்திற்கு அளிக்கப்படும் மரணசாதனக்கொடைகள், நன்கொடைகள், மானியங்கள் என்பவற்றைப் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடனும் பெற்றுக்கொள்ளலும் ஏற்றுக் கொள்ளலும்;

(ஊ) நிறுவகத்தின் ஆண்டறிக்கையையும் கணக்குக்கூற்றுக்களையும் சீர்தூக்கிப்பார்த்தலும் விதந்துரைத்தலும் அத்துடன் ஆண்டறிக்கையையும் அத்தகைய கணக்குக்கூற்றையும் பேரவைக்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பித்தலும்;

(எ) நிறுவகத்தின் நிதி மதிப்பீடுகளைத் தயாரித்தலும், அத்தகைய நிபந்தனைகளைப் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக் குழுவுக்கும் சமர்ப்பித்தலும்;

(ஏ) இயைபான கற்கைச்சபையுடன் அல்லது கற்கைச் சபைகளுடன் கலந்தாலோசித்து முகாமை மற்றும் நிருவாகக் கற்கைநெறிகளின் பல்வேறு சிறப்புக்கூறுகளில் வழங்கப்படவேண்டிய பட்டப்பின் பட்டங்கள் டிப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விசார் சிறப்புக்கள் ஆகியவற்றையும் அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள், வேறு கல்விசார் சிறப்புகள் ஆகியவற்றிற்குத் தகைமைபெற விரும்பும் மாணவர் பின்பற்ற வேண்டிய கற்கை நெறிகளையும் பயிற்சியையும் சித்தியடையவேண்டிய கற்கை நெறிகளையும் பயிற்சியையும் சித்தியடைய வேண்டிய தேர்வுகளையும் திருப்திசெய்யவேண்டிய நிபந்தனைகளையும் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல்;

(ஐ) எக்கருமம் தொடர்பில் துணைவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ, அக்கருமத்துக்காகத் துணைவிதிகளை வரைதலும், சட்டமாக்கப்படுவதற்காக அத்தகைய வரைவுகளைப் பேரவைக்குச் சமர்ப்பித்தலும்;

ஆயின், எவ்வாறாயினும், இயைபான சபையினால் அல்லது கற்கைச் சபையினால் செய்யப்பட்ட அறிக்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னரன்றி, சம்பந்தப்பட்ட கற்கைநெறிகள், தேர்வுகள் என்பன தொடர்பான துணைவிதி எதுவும் வரையப்படுதலாகாது;

(ஒ) இயைபான சபையினால் அல்லது கற்கைச்சபைகளினால் செய்யப்பட்ட அறிக்கைகளைச் சீர்தூக்கிப்பார்த்த பின்னர், கற்கைநெறிகள், தேர்வுகள் ஆகியவை தொடர்பிலான ஒழுங்குவிதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளைப் பல்கலைக்கழக முதவைக்குச் சமர்ப்பித்தலும்;

(ஓ) எக்கருமம் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அல்லது தேவைப்படுத்தப் பட்டதோ அக்கருமத்துக்காக விதிகளை வரைதலும், விடயத்துக்கேற்றாற்போல, பேரவைக்கோ அல்லது மூதவைக்கோ சட்டமாக்குவதற்காக அத்தகைய வரைவுகளைச் சமர்ப்பித்தலும்;

(ஔ) நிறுவகத்தின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்கள், வளவுகள், தளபாடங்கள், சாதனங்கள், வேறு பொருட்கள் ஆகியவற்றிற்கு ஏற்பாடுசெய்தல் அல்லது ஏற்பாடு செய்யப்படச் செய்வித்தல்;

(க) பின்வருவனபற்றி ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல்:

(i) நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள், விரிவுரையாளர் பதவிகள் மற்றும் வேறு பதவிகள் ஆகியவற்றை உருவாக்குதல், இல்லாதொழித்தல் அல்லது இடைநிறுத்தி வைத்தல்; அத்துடன்

(ii) நிறுவகத்துக்கு ஆசிரியர்களாக, அலுவலர்களாக மற்றும் வேறு ஊழியர்களாக நியமிக்கப்படவேண்டிய ஆட்களிடம் தேவைப்படுத்தப்படும் தகைமைகள்.

(ங) நிறுவகத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை இடைநிறுத்துதல், நீக்கஞ்செய்தல் அல்லது அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன பற்றிப் பல்கலைக்கழகத்துக்கு மதியுரையளித்தல்;

(ச) அவசியமானவையென கருதுகின்றவாறான நிலையியற் குழுக்களை அல்லது நிமித்தக்குழுக்களை நியமித்தலும், அவற்றின் விசாரணை விடயங்களைக் குறித்துரைத்தலும், அவர்களின் அறிக்கைகளை கவனத்திற்கொள்ளுதல், அத்துடன் ஆராய்ந்து திரிபுடனோ திரிபுகளின்றியோ அங்கீகரித்தலும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரித்தலும்;

(ஞ) பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானம் உட்பட, நிறுவகத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை, நம்பிக்கைப் பொறுப்புக்கள் கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நம்பிக்கைப் பொறுப்புப் பணங்களை எப்பிணைப்பொறுப்புக்களில் முதலீடு செய்தல் சட்டமுறையானதோ, அப்பிணைப்பொறுப்பு எதிலும் முதலீடு செய்தலும் அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்தோடு அத்தகைய எவையேனும் பணங்களை இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும், அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தலும் அல்லது உடனடிச் செலவுக்குத் தேவைப்படாததான அத்தகைய பணங்களின் ஏதேனும் பகுதியை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பில் இடுதலும்;

(ட) இக்கட்டளைச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு நிறுவகத்தின் தத்துவங்களிற்கு இடைநேர்விளைவானதாக இருக்கின்ற அல்லது அதன் தத்துவங்களின் மீது விளைவாந்தன்மை யுடையதாக இருக்கின்றதான நிறுவகத்தின் வேறு அத்தகைய தத்துவங்களைப் பிரயோகித்தல்;

(4) சபையானது, ஏதேனும் கல்விசார் விடயம் பற்றித் தோதான கற்கைச்சபை அதன் அபிப்பிராயத்தைப் பதிந்து சபைக்கு அனுப்பிவைப்பதற்கான சந்தர்ப்பத்தை அக்கற்கைச்சபைக்கு முதலில் கொடுத்திருந்தாலொழிய கல்விசார் விடயம் தொடர்பான தீர்மானம் எதுவும் சபையினால் நிறைவேற்றப்படுதலாகாது:

ஆயின், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் அன்றி அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீதும் செயலாற்றுதலாகாது.

9. பின்வருவோர் நிறுவகத்தின் அலுவலர்களாக இருத்தல் வேண்டும்:

(அ) பணிப்பாளர்; அத்துடன்

(ஆ) எப்பதவியை வகிப்பவர் இந்தப் பந்தியின் நோக்கத்துக்காக ஓர் அலுவலராக இருக்கின்றாரோ, அப்பதவி ஒன்றாகக் கட்டளைச்சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

10. (1) இக்கட்டளைச் சட்டம் வலுவிற்கு வருகின்றபோது, பதவிவகிக்கும் பணிப்பாளர் அவருடைய பதவிக்காலம் முடிவுறும் வரை அத்தகைய பதவியில் பணியாற்றுவதற்கென தொடர்ந்திருத்தல் வேண்டும். அடுத்துவரும் ஒவ்வொரு பணிப்பாளரும் நிறுவகத்தின் முகாமைச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட மூன்று ஆட்களைக்கொண்ட ஒரு குழாத்திலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும் ஆளெவரும் இரண்டு தொடர்ச்சியான காலப்பகுதிகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) உயர்கல்வி நிறுவனத்தின் அல்லது உயர்கல்வி நிறுவகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவர் பணிப்பாளராக நியமிக்கப்படுமிடத்து, அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவகம் பணிப்பாளர் பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட பணியாட்டொகுதியின் அத்தகைய உறுப்பினரை விடுவித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது (4) ஆம் உட்பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவருடைய நியமனத் தேதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்றாண்டுக் காலப்பகுதிக்கு, அல்லது அவர் தமது அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவு செய்யும்வரை, இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அதுவரை, பதவிவகித்தல் வேண்டும்.

(4) பணிப்பாளர் ஒருவர், குறித்தநோக்கத்திற்காக கூட்டப்பட்ட முகாமைச் சபையின் விசேட கூட்டமொன்றில் அதன் உறுப்பினரது மொத்தத் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர்க்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானத்தின்பேரில் ஆணைக்குழுவின் தவிசாளரால் பதவிகளிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அத்தகைய விசேட கூட்டத்தில் சமுகமளித்த உறுப்பினர்கள், பணிப்பாளர் அல்லாத ஆள் ஒருவரை அத்தகைய கூட்டத்தில் தலைமை வகிக்கவெனத் தம்முள்ளிலிருந்து தெரிவு செய்தல் வேண்டும்.

(5) பதவி துறக்கும் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படும் அல்லது பதவிக்காலத்தைப் பூரணமாக்கும் ஒவ்வொரு பணிப்பாளரும், பணிப்பாளராக நியமிக்கப்படுவதற்கு உடன் முன்னர் ஓர் உயர்கல்வி நிறுவனத்திற் பணியாட்டொகுதி உறுப்பினராக இருந்திருந்தால் அவர் தம் அறுபத்தைந்தாம் ஆண்டை நிறைவாக்கியிராவிடின், அத்தகைய உயர்கல்வி நிறுவனத்திலுள்ள நிலையான தமது பதவிக்கு மீண்டும் செல்லலாம்.

(6) பணிப்பாளர், லீவு, சுகவீனம், இலங்கையில் இல்லாமை என்பன காரணமாக அல்லது வேறு காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராயிருப்பின்; ஆணைக்குழு, அத்தகைய இயலாமை ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள், பணிப்பாளரின் அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தகுந்தவையென அது கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்கைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை, பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் பீடாதிபதி அல்லது பல்கலைக்கழகப் பதிவாளர், அப்பதவிக்குரிய நாளாந்தக் கடமைகளைக் கொண்டு நடாத்துதலும் வேண்டும்.

(7) பணிப்பாளர் பதவியில் எழுகின்ற வெற்றிடம் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதிலிருந்து ஏழு நாட்களுக்குள், ஆணைக்குழு, (1) ஆம் உட்பந்தியின்கீழ் ஒரு நிரந்தர நியமனம் செய்யப்படும் வரை, அப்பதவிக்குரிய கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தகுந்தவையென அது கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்யுமிடத்து அத்தகைய ஒழுங்குகள் பல்கலைக்கழகப் பதிவாளரினால் செய்யப்படும்வரை அப்பதவிக்குரிய வழமையான கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

11. (1) பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வி அலுவலராகவும் இருப்பதோடு சபையின் பதவிவழி உறுப்பினராகவும் தவிசாளராகவும் கற்கைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தலும் வேண்டும். அவர் நிறுவகத்தின் வேறு ஏதேனும் அதிகார சபையையும் அல்லது குழுவினையும் கூட்டவும், அவற்றில் சமுகமளிக்கவும் பேசவும் அவர் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அத்தகைய வேறு அதிகாரசபையின் அல்லது குழுவின் உறுப்பினராயிருந்தாலன்றி, அத்தகைய ஏதேனும் கூட்டத்தில் வாக்களிக் உரித்துடையவராதலாகாது.

(2) சபையினால் அதன்சார்பில் பணிப்பாளருக்கு காலத்துக்குக்காலம் சட்டமுறையாக வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புரைகளுக்கிணங்க, கட்டளைச்சட்டம், சட்டம் மற்றும் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகள் நிறுவகத்துடன் தொடர்புபட்ட அளவிற்கு, முறையாக அவதானிக்கப்படுகின்றன என உறுதிப்படுத்துதல் பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அவர் இந்நோக்கத்திற்கு அவசியமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய தத்துவங்கள் யாவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றை பிரயோகிக்கலாம்.

(3) சபையினதும் ஒவ்வொரு கற்கைச் சபையினதும் முடிவுகளுக்குப் பயன்கொடுத்தல் அல்லது பயன்கொடுத்தலை உறுதிப்படுத்தல் பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளரே நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(5) நிறுவகத்துக்குள்ளாக ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பணிப்பாளர் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

12. நிறுவகமானது, சபையினது விதப்புரையின்மீது, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட, முகாமை மற்றும் நிருவாக கற்கைகளின் படி ஒவ்வொரு கற்கை கிளை தொடர்பாகவும் கற்கைச் சபைகளைத் தாபித்தல் வேண்டும்.

13. (1) கற்கைச்சபை ஒவ்வொன்றும் பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) பணிப்பாளர்; அத்துடன்

(ஆ) சபையினால் நியமிக்கப்படும் ஏனைய ஆறு உறுப்பினர்கள்; இவர்களுள் ஆகக்குறைந்தது மூவர் பல்கலைக்கழகத்தின் அல்லது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக வேறு ஏதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது தோதான உயர்தொழில் குழுவின் முகாமைக் கற்கைகள் மற்றும் வணிகபீடத்தின் பேராசிரியர்களாக/ இணைப் பேராசிரியர்களாக/சிரேட்ட விரிவுரையாளர்களாக/விரிவுரையாளர்களாக இருத்தல் வேண்டும்.

(2) ஏதேனும் கற்கைச்சபை, அதன் ஒருப்பாட்டுடன் குறித்தவொரு நோக்கத்துக்கும் குறித்தவொரு காலப்பகுதிக்கும் உறுப்பினர் ஒருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கையினரான உறுப்பினர்களை உடன் சேர்க்கலாம்; அல்லது அவ்வாறு உடன்சேர்க்கப்பட்ட உறுப்பினர் எவரும் தேர்தலுக்கு நிற்கவோ அல்லது அத்தகைய கற்கைச் சபையின் எந்தக் கூட்டத்திலும் வாக்களிக்கவோ உரிமை கொண்டிருத்தலாகாது.

(3) ஏழாம் பந்தியின் (2) ஆம் மற்றும் (4) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகள் ஏதேனும் கற்கைச்சபையின் ஒவ்வொரு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஒவ்வொரு கற்கைச் சபையும் ஒரு தவிசாளரைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர் கற்கைச் சபை உறுப்பினர் களிடையேயிருந்து இயைபான கற்கைச்சபையினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(5) ஒவ்வொரு கற்கைச் சபையும் ஒரு செயலாளரைக் கொண்டிருத்தல் வேண்டும்; அவர் கற்கைச் சபை உறுப்பினர்களிலிருந்து இயைபான கற்கைச்சபையினால் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், உடன்சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் இருந்தால் அவர்கள் நீங்கலாக, ஐந்து உறுப்பினராதல் வேண்டும்.

14. இக்கட்டளைச்சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, ஒவ்வொரு கற்கைச் சபையும் பின்வரும் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைப் பிரயோகத்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும்வேண்டும்:

(அ) சபை அதற்கு ஆற்றுப்படுத்திய ஏதேனும் கருமத்தைச் சீர்தூக்கிப்பார்த்து அறிக்கை செய்தல்;

(ஆ) நிறுவகத்திலுள்ள போதனை, பரீட்சைகள் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றோடு தொடர்புபட்ட கருமங்களை, சபையின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தல்;

(இ) நிறுவகத்தினால் கொண்டு நடாத்தப்படும் கற்கைநெறிகளுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்கள் பற்றியும் அந்நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகள் பற்றியும் சபைக்கு விதப்புரைகளைச் செய்தலும் அறிக்கையிடலும்; அத்துடன்

(ஈ) பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல்.

15. நிறுவகத்தின் நிதி ஆண்டு பல்கலைக்கழகத்தின் நிதி ஆண்டாதல் வேண்டும்.

16. (1) நிறுவகமானது பட்டப்பின் முகாமைத்துவ நிறுவக நிதியம் என அழைக்கப்படும் ஒரு நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்; அது இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும், அந்நிதியத்துள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்:

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்துக்குச் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஆ) அறக்கொடைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்;

(இ) நிறுவகத்தின் உதவிக்கான மானியங்களாகப் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டவையும் ஆணைக்குழுவால் செலவழிக்கப்பட்டவையுமான பணங்கள்; அத்துடன்

(ஈ) எவ்வகையான மூலத்திலிருந்தும் பெறப்பட்டவையும் நிறுவகத்துக்குரியவையுமான வேறெல்லாப் பணங்களும்.

(2) நிதி ஆண்டின் ஒவ்வொரு காலாண்டின்போதும் நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட பணங்கள் யாவற்றினதும் ஒரு சுருக்கம், தோதான வருவாய்த் தலைப்புகளின்கீழ் வகுக்கப்பட்டு அடுத்துவரும் காலாண்டு முடிவடைவதற்கு முன்னர், அதனது தகவலுக்காக ஆணைக்குழுவிற்கு அதற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

17. பின்வருவன பணியாளரின் கடமையாதல் வேண்டும்:

(அ) நிறுவகத்தின் கணக்குகளைக் கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல்;

(ஆ) நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெற்றுக்கொள்ளுதலும் அத்தகைய பணங்களைத் தகுந்த தலைப்புகளில் வரவுவைத்தலும்;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல்; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய மூன்றாண்டுக்கொருமுறையான மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டுக்கான ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்காகத் தயாரித்தல்.

ஆயின், எவ்வாறாயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக செய்யப்பட்ட மானியங்களிலிருந்து அல்லது அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்படல் வேண்டும் என்பதுடன், நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் எந்நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக ஆணைக்குழுவின் முன் அங்கீகாரம் இன்றி முறையாக வழங்கப்பட்டனவோ, அந்நோக்கம் அல்லது குறிக்கோள் அல்லது குறிக்கோளுக்காக அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படலுமாகாது.

18. (1) நிறுவகமானது, அதன் செயற்பாடுகள் தொடர்பான கணக்குகளையும் புள்ளிவிபரங்களையும் பற்றிய ஆண்டுக் கூற்றொன்றை ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் அந்நிறுவகத்தின் அலுவலகத்தில் பேணப்படுதல் வேண்டும்.

19. ஓர் உயர்கல்வி நிறுவனத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் தொடர்பிலான சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

20. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது, நிறுவகத்தின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் ஆகியவற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் சபையானது பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் ஆசிரியர்களையும் வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பல்கலைக்கழகம் அதன் சொந்தப் பணியாட்டொகுதியினரிலிருந்து பணியாட்டொகுதியினரை விடுவிப்பதன்மேல் நிறுவகப் பணியாட்டொகுதியினருக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது நிறுவகப் பணியாட்டொகுதியினர் ஆணைக்குழுவால் நியமிக்கப்படுதல் வேண்டும். உயர்கல்வி நிறுவனமொன்றின் பணியாட்டொகுதியினரை நியமித்தல் தொடர்பான சட்டத்தின் X ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், நிறுவகப் பணியாட்டொகுதி நியமனங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகத்தின் ஓர் அலுவலர், ஆசிரியர் அல்லது வேறு ஊழியர் முழுநேர அடிப்படையில் நிறுவகத்தில் சேவைசெய்ய விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, நிறுவகமானது பல்கலைக்கழகத்திலுள்ள அவரது நிலையான பதவிக்கான சம்பளத்தையும் படிகளையும் அவருக்கு செலுத்துதல் வேண்டும். வேறேதேனும் விடயத்தில், சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியருக்கு நிறுவகமானது பல்கலைக்கழகத்தின் கலந்தாலோசனையுடன் அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு படிகளைச் செலுத்துதலும் வேண்டும்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

21. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராக இருப்பதற்கு எவரேனும் ஆள் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா, நியமிக்கப்பட்டுள்ளாரா, பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளாரா அல்லது உடன்சேர்க்கப்பட்டுள்ளாரா என்பதுபற்றி அல்லது அதன் உறுப்பினராக இருப்பதற்கு உரித்துடையவரா என்பது பற்றி ஏதேனும் கேள்வி எழின், அக்கேள்வி ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்; அதுமீதான ஆணைக்குழுவின் முடிவு இறுதியானதாயிருத்தல் வேண்டும்.

22. நிறுவகத்தின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருப்பதன் காரணமாக மட்டும் அல்லது அத்தகைய உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும், செல்லுபடியற்றதாக்கப்படலாகாது.

*23.* இக்கட்டளைச் சட்டத்தில் :

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்.

*24.* (1) 1985, திசெம்பர் 31 ஆந் தேதிய 382/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கட்டளைச்சட்டமும் 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி 09 ஆந் தேதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கட்டளைச்சட்டமும் மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) 1985 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கட்டளைச்சட்டத்தின் 16 ஆம் பந்தியினால் தாபிக்கப்பட்ட நிதியத்தின் வரவிற்கு இருக்கும் எல்லா நிதிகளும் எந்தத் தேதியன்று இக்கட்டளைச்சட்டம் வலுவிற்கு வருகின்றதோ அந்தத் தேதிக்கு முற்போந்த நாளன்று அந்தத் தேதியிலிருந்து பயனுறும் வகையில் இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் நிறுவகத்தின் நிதியத்தின் வரவுக்கிருக்கும் நிதிகளாக தொடர்ந்திருத்தல் வேண்டும்.

9 - 209

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.